கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)

திருமங்கலம்.

2026ம் வருடம் மார்ச் மாதம் 18ம் தேதி புதன்கிழமை

இடைநிலை மனு எண்.5/2025

இன்

அசல் வழக்கு எண்.117/2022

* * * *

வேல்ராஜா ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1) அலமேலு

2) நடராஜன் ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனு 09.03.2026ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் மனுதாரருக்கு மனுதாரரே ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் திரு.S.ராஜேந்திரன் அவர்கள் ஆஜராகியும், மனு மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தரப்பில் வாடகை ஒப்பந்தத்தைத் தயாரித்தவரும், சாட்சியுமான முத்துராஜ் என்பவருக்கு முறைப்படி நீதிமன்ற

அழைப்பாணை அனுப்பி விசாரணை செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி கட்டளை 16 விதி 1 மற்றும் பிரிவு 151 cpc படி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையில், மனுதாரர் வழக்கை தாமதப்படுத்தும் நோக்கத்தோடு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள விவரங்கள் சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், இம்மனுவை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு செலவுத்தொகையுடன் சேர்த்து தள்ளுபடி செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>தீர்மானிக்க வேண்டிய விசயம்</u>** :

4. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u> :**

5. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது மனுதாரர்/வாதி தரப்பில், பிரதிவாதிகள் மீது, வாதியை தாவாச்

சொத்திலிருந்து பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ, ஏஜெண்டுகளோ எந்தவிதமான சட்டமுறையான வழியில் அல்லாமல் வேறு வழியில் அப்பறப்படுத்தக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருக்கும்போது, வழக்கின் வாடகை ஒப்பந்தம் வா.சா.ஆ.1 சம்பந்தமாக 2வது சாட்சியான சுமதி என்பவர் விசாரிக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார் என்றும், இச்சூழ்நிலையில் வீட்டு வாடகை ஒப்பந்த பத்திரம் வா.சா.ஆ.1ஐ தயார் செய்த முத்துராஜ் என்பவரை நீதிமன்றத்திற்கு வரவழைத்து விசாரிப்பது நியாயமான ஒன்று என்று கூறியுள்ள மனுதாரர்/வாதி தரப்பு வாதத்தினை கருத்தில்கொண்டும், வீட்டு வாடகை ஒப்பந்த பத்திரம் வா.சா.ஆ.1ஐ தயார் செய்த முத்துராஜ் என்பவரை சாட்சியாக விசாரிக்கும் பொருட்டு, அசல் வழக்கின் ஒரு முழுமையான தீர்வுக்கு கொண்டு வருவதற்கும், வழக்கு தரப்பினர்களுக்கு இடையேயுள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கு இம்மனுவினை அனுமதிப்பது ஒரு காரணியாக அமையும் என்பதை கருத்தில்கொண்டும், இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 18ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.18 16:21:23 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

**இணைப்பு:**

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.18 16:21:32 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண். 5 /2025
அசல் வழக்கு எண்.117/2022
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 18.03.2026